# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. No. 291 /2022 PW1

06.04.2026 **வா..சா.1 கோதாவரி சத்திய வாக்குமூலத்தின் பேரில் 12 முதல் 14 மற்றும் 16ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

இந்த வழக்கை எனது தம்பிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். குடும்ப சொத்தில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1 முதல் 11 பிரதிவாதிகள் என்னுடைய உறவினர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கானது எனக்கும் 1 முதல் 11 பிரதிவாதிகளுக்கும் இடையேயான சொத்து பாகம் கோருவது சம்மந்தமான வழக்காகும். 12 முதல் 16 பிரதிவாதிகளுக்கும் இந்த வழக்கு சொத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், அவர்கள் அரசு ஊழியர்கள் என்றால் சரிதான். நான் சரியான ஆணங்களை தாக்கல் செய்து பதிவு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் 12ம் பிரதிவாதிக்கு ஆவணங்களை பதிவு செய்வதற்கு எந்தவித தடையும் இல்லை என்றால் சரிதான். சரியான ஆவணங்கள் இருக்கும் பட்சத்தில் பட்டா மாறுதல் செய்ய 14ம் பிரதிவாதிக்கு தடையில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் தனிப்பட்ட விருப்பு வெறுப்பிற்காக வழக்கு சொத்தில் சம்மந்தமில்லாத 12 முதல் 16 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 12 முதல் 16 பிரதிவாதிகள் அரசு விதிகள் மற்றும் நீதிமன்ற உத்தரவு படி செயல்படுவார்கள் என்றால் சரிதான். நான் 12 முதல் 16 பிரதிவாதிகளுக்கு எதிராக கேட்டுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.